# ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டும்?

- இலங்கையில் 2010 ஜனவரி 26ந் திகதி ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளது. புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர் நடைபெறும் தேர்தலாக இது இருப்பதால், இத்தேர்தல் முடிவை அனைத்துலகமும் ஆவலுடன் எதிர்பார்த்து நிற்கிறது.
- இத்தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, முன்பு போலவே ஜனநாயக – முற்போக்கு மற்றும் சிறுபான்மை இன கட்சிகளின் ஆதரவுடன் போட்டியிடுகின்றார்.
- அரசியல் அனுபவமும், தனக்கென கட்சி எதுவும் இல்லாத முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகா, தேர்தலில் போட்டியிட்டு வெல்லமுடியாத வலதுசாரி ஐக்கிய தேசிய கட்சியினதும், இனவாத ஜே.வி.பியினதும் வேட்பாளராக போட்டியிடுகின்றார்.
- இத்தகைய ஒரு சூழ்நிலையில், தமிழ் மக்கள் இத்தேர்தலில் யாருக்கு வாக்கு அளிக்க வேண்டும் என்ற விடயம் மிக முக்கியமானது. கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது, விடுதலை புலிகள் தமிழ் மக்களை வாக்களிக்க விடாது தடுத்து, அவர்களது வாக்குரிமையை பறித்ததால், அவர்கள் தமது முக்கியமான ஜனநாயக உரிமையை இழக்க நேரிட்டது. மகிந்தவின் அரசு, புலிகளை தோற்கடித்து, தமிழ் மக்களுக்கு ஒரு ஜனநாயக சூழலை ஏற்படுத்தியுள்ளதால், அவர்களுக்கு இம்முறை தேர்தலில் வாக்களிக்கும் அரிய சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.
- 'தமிழ் ஈழம்' என்ற தவறானதும், அடைய முடியாததுமான கனவு, புலிகளின் தோற்கடிப்புடன் செல்லாக் காசாகிவிட்ட சூழலில், நாம் விரும்பியோ, விரும்பாமலோ ஐக்கிய இலங்கைக்குள் வாழ்வது தான் எமக்கு முன்னாலுள்ள ஒரே வழியாகும். எனவே ஐக்கிய இலங்கைக்குள், எமது உரிமைகளை உரிய முறையில் பெற்று வாழ்வதற்கான சூழலை ஏற்படுத்தும் பொருட்டு, தகுதியான ஒருவரை ஜனாதிபதியாக தெரிவு செய்வதில் எமது பங்களிப்பையும் வழங்குவது அவசியமானது. எனவே இரண்டு பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களையும் பொறுத்த வரையில், எமக்கு உகந்தவர் யார் என்பதை தீர்மானிப்பது அவசியமானது.

## பொன்சேகா – ஐ.தே.க – ஜே.வி.பி இனவாதக் கூட்டு நாட்டுக்கு கேடு!

முதலில் சரத் பொன்சேகாவை எடுத்துக்கொண்டு பார்ப்போம். பொன்சேகா நடைபெற்று முடிந்த யுத்தத்தில், புலிகளுக்கு எதிராக மட்டுமின்றி, அனைத்து தமிழ் மக்களுக்கும் எதிரான ஒரு போர்வெறியராகவே செயல்பட்டார் என்பதை தமிழ் மக்கள் நன்கு அறிவர். அவர் ஒரு இனவாதியாக இருப்பதே அதற்குக் காரணம்.

அவர் நாட்டின் பொறுப்பான ஒரு பதவியில் இருந்துகொண்டு, 'இலங்கை சிங்களவர்களுக்கு மட்டுமே உரிய ஒரு நாடு' என பலமுறை கருத்து தெரிவித்து வந்துள்ளார். கனடாவிலிருந்து வெளிவரும் 'நாஷனல் போஸ்ட்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியொன்றின் போது, "இலங்கை சிங்களவர்களுக்கு மட்டும் உரிய நாடு. தமிழர்களும் முஸ்லீம்களும் அங்கு வேணுமானால் விருந்தினர்கள் போல் இருந்துவிட்டு போகட்டும்" என இனவாத ரீதியில், துடுக்குத்தனத்துடன் கூறியுள்ளார். இப்பொழுதும் கூட அவர் தனது ஜனாதிபதி தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு எந்தவொரு தீர்வையும் முன்வைக்கவில்லை.

பொன்சேகாவை வேட்பாளராக நிறுத்தியிருக்கும் ஐ.தே.க மற்றும் ஜே.வி.பி என்பனவும் தமிழ் மக்களுக்கு எதிராகவே கடந்த காலங்களில் செயல்பட்டு வந்துள்ளன.

- சுதந்திர இலங்கையின் முதலாவது ஐ.தே.க அரசாங்கமே, தமிழர் பகுதிகளில் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களை ஆரம்பித்து வைத்தது.
- அதே அரசாங்கமே மலையக தமிழ் மக்களின் வாக்குரிமையையும், பிரஜாவுரிமையையும் பறித்து அவர்களை நாடற்றவர்களாக்கியது
- 1957ல் 'பண்டாரநாயக்க - செல்வநாயகம் உடன்படிக்கை' மூலம் தமிழ் மக்களுக்கு பிராந்திய சபைகள் வழங்க முற்பட்ட போது, அதை

நடைமுறைப்படுத்தவிடாது, புத்த பிக்குகளை வீதியில் இறக்கி கலகம் விழைவித்து, அந்த உடன்படிக்கையை கிழித்தெறிய வைத்ததும் ஐ.தே.க தான்.

- பின்னர் 1987ல் 'இந்திய-இலங்கை உடன்படிக்கை' மூலம் உருவான வட கிழக்கு மாகாணசபையை செயல்பட விடாது, புலிகளின் உதவியுடன் அதைக் கலைத்ததும் ஆர். பிரேமதாசவின் ஐ.தே.க அரசு தான்.
- 2000ம் ஆண்டில் சந்திரிகாவின் அரசு, இலங்கையின் ஒற்றையாட்சி தன்மையை மாற்றி, வட கிழக்கு பிராந்திய சபை அமைக்க முற்பட்ட போது, ஐ.தே.க அந்த தீர்வு நகலை பாராளுமன்றத்தில் கிழித்து வீசி, தீயிட்டு கொளுத்தியதுடன், ஜே.வி.பி, ஹெல உருமய, புலிகள், தமிழர் விடுதலை கூட்டணி என்பனவற்றின் உதவியோடு அதை நிறைவேற்றவிடாமல் தடுத்தது.
- துற்போதைய அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக, சர்வகட்சி கூட்டத்தை கூட்டியபோது, ஐ.தே.கவும், ஜே.வி.பியும் அதில் பங்குபற்றாததுடன், ஜே.வி.பி அதை கலைத்துவிடும்படியும் கோரி வந்துள்ளது.
- இவையெல்லாம் ஒருபுறமிருக்க, இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக 1958, 1977, 1981, 1983 ஆண்டுகளில் நடாத்தப்பட்ட மிகக் கொடூரமான சகல இனவன்முறைகளையும், ஐ.தே.க தான் முன்னின்று நடாத்தியது என்பதை தமிழ்மக்கள் நன்கு அறிவர்.
- இப்பொழுது கூட, ஐ.தே.கவும், ஜே.வி.பியும் நிறைவேற்று ஜனாதிபதி முறை ஒழிப்பு, 17வது திருத்த சட்ட அமுலாக்கம் பற்றி பேசுகிறார்களேயொழிய, தமிழ் மக்களின் பிரச்சினைக்கு எந்தவொரு தீர்வையும் முன் வைக்கவில்லை.
- இந்த இரு கட்சிகளும் நிறுத்தியுள்ள பொன்சேகா ஆட்சிக்கு வந்தால், முன்னைய ஜனாதிபதிகளைப் போலவே, நிறைவேற்று ஜனாதிபதி முறையை அவரும் ஒருபோதும் ஒழித்துவிடப் போவதில்லை என்பது ஒருபுறமிருக்க, இராணுவவாதியான பொன்சேகா வெற்றி பெற்றால், பாகிஸ்தான், பர்மா போன்று இலங்கையிலும் இராணுவ ஆட்சியே உருவாகும். தமிழ் மக்கள் இப்பொழுது அனுபவிக்கும உரிமைகள் கூட அவரது ஆட்சியில் நசுக்கப்படும். நாடு அந்நிய ஆதிக்க சக்திகளுக்கு அடகு வைக்கப்படும்.

## ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் ஆக்கபூர்வமான தலைமைத்துவம்!!

- மறுபக்கத்தில், தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை எடுத்துக்கொண்டால், அவர் இனப்பிரச்சினைக்கு உண்மையான முறையில் தீர்வுகாண்பதற்கு முன்னர் முயற்சிகள் மேற்கொண்ட அமரர் பண்டாரநாயக்கவினதும், அவரது புதல்வி சந்திரிகாவினதும் கட்சியை சார்ந்தவராக இருப்பதுடன், தனது ஆட்சி காலத்திலும் அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார்.
- மகிந்தவின் தலைமைத்துவம், 25 ஆண்டுகள் நீடித்த கொடிய போரை முடிவுக்கு கொண்டு வந்து, தமிழ் மக்களையும் நாட்டையும் பாதுகாத்ததுடன், போர் முடிவுற்ற பின்னர் இடம் பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்துவதிலும், தமிழ் பகுதிகளை துரிதகதியில் பொருளாதார அபிவிருத்தி செய்வதிலும், அர்ப்பணிப்புடன் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.
- அத்துடன், சர்வகட்சி கூட்ட ஆலோசனைகளை உள்வாங்கிக்கொண்டு, 13வது திருத்த சட்டத்துக்கும் அப்பால் சென்று, இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதாகவும், மகிந்த அரசு வெளிப்படையாக அறிவித்துள்ளது.

எனவே தமிழ் மக்கள் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை ஆதரித்து வாக்களிப்பதன் மூலம், இனப்பிரச்சினை தீர்வுக்கான முயற்சிகளை தங்குதடையின்றி முன்னெடுத்து செல்ல உதவுவதுடன், நாட்டின் சுதந்திரம், ஜனநாயகம் என்பனவற்றை பாதுகாக்க உதவுவதும், காலத்தின் தேவையும், கடமையுமாகும்.

**கனடியத் தமிழர் ஜனநாயக விழிப்புணர்வு மன்றம்**
**ரொறன்ரோ**
தொடர்புகளுக்கு – demovizhippu@hotmail.com 18/12/2009